1975 ஏப்ரல் 9]

நிலச்சுவான்தார்கள் வீட்டிலிருந்து நெல் கட்டாயமாக எடுக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான மூட்டைகள் வைத்திருந்த ஒரு மிராஸ்தார் வீட்டில் போலீசார் சென்று நெல்லை எடுத்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் நீதிமன்றத்திற்குக்கூடப் போயிருக்கிறார்கள். ஒரு பெரிய விவசாயி நூற்றுக்கணக்கான எக்கர் நிலத்தை அவருடைய குடும்பத்தார் பேரில் பிரித்து வைத்திருக்கிறார். அதையும் கண்டுபிடித்து, அந்த நெல்லையும் எடுத்திருக்கிறோம். அவர்கள் எடுத்த நெல்லைத் திருப்பித் தர வேண்டுமென்று "சூட் நோட்டீஸ்" கூடக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சில பெரிய விவசாயிகள் தங்கள் பக்கம் வரக்கூடாது என்று "இன்ஜங்ஷன்" வாங்கியிருக்கிறார்கள். ஆகவே, பெரிய விவசாயிகளிடம் நாம் போகவில்லை என்று சொல்வது தவறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 609, 610 ஆகிய இரண்டுக்கும் பதில் அளித்து விடுங்கள்.

HULLING CHARGES.

*609 Q—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government to fix the hulling charges, charged by the Rice Mills in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தற்போதைக்கு இந்த உத்தேசம் இல்லை.

(இ) கேள்விக்கு இடம் இல்லை.

பதுக்கல் நெல்லை கைப்பற்றல்.

* 610 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு உணவு-கூட்டுறவு துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாட்டில் 1974-ம் ஆண்டு, ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பிடிக்கப்பட்ட பதுக்கல் நெல் மூட்டைகள் எத்தனை?

(இ) இவைகளுக்கு விலையாகக் கொடுக்கப்பட்ட ரூபாய் எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 16,654 மூட்டைகள் நெல்; மேலும் 5,372 மூட்டைகள் அரிசி.

(இ) பதுக்கல்காரர்கள்மீது தொடுக்கப்பட்ட வழக்குகள் முடிவு பெற்ற பின்பு அம்முடிவுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.